| UG-AN-1016 | BLTN-11 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JULY 2024.

## Tamil

## First Year

### இக்கால இலக்கியம்

Time : 3 hours　　　　Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.

1. பாரதியின் சென்னை வாழ்க்கையைக் குறித்து எழுதுக.

2. நல்வாழ்வு வாழ்தல் எப்போது எளிமையாகும்?

3. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் தனிமொழியின் இன்றியமையாமை குறித்து எழுதுக.

4. கயிற்றரவு எனும் சிறுகதையின் கதைக்கரு யாது?

5. குமாரசாமியின் பகல்பொழுது புதினத்தின் கதைக்கரு குறித்து எழுதுக.

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

6. ஜீவாவின் "கோடிக்கால் பூதம்" கவிதையின் உள்ளடக்கம் குறித்து எழுதுக.

7. அருணகிரியாரும் பெண் உலகமும் குறித்து எழுதுக.

8. தமிழில் பத்தொன்பதாம் நூற்றாண்டு நாடகங்கள் குறித்து எழுதுக.

9. புதுமைப்பித்தன் படைப்புகளில் மனித முரண் என்பதை விளக்குக.

10. குமாரசாமியின் பகல் பொழுது புதினத்தின் படைப்பு நுட்பங்கள் பற்றி விளக்குக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

11. பாரதிதாசனின் பாடல்களில் மேலோங்கியிருக்கும் பொதுவுடைமை நாட்டத்தினை நும்பாடப்பகுதி கொண்டு விவரி.

12. கவிஞர்கள் சுட்டும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்புகளும் அதற்கான தீர்வுகளும் குறித்து விளக்கியெழுதுக.

13. மு.வ.வின். மொழிநடையைக் குறித்துக் கட்டுரை வரைக.

14. கவிச்சக்கரவர்த்தி : நாடகக் கூறுகள் குறித்து விவரித்தெழுதுக.

15. தமிழில் சிறுகதை இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

16. புதுமைப்பித்தனின் படைப்புலகம் குறித்து நும் பாடப்பகுதி கொண்டு மதிப்பிடுக.

17. குமாரசாமியின் பகல்பொழுது புதினம் காட்டும் சமுதாயம் பற்றிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

---

| UG-AN-1017 | BLTN–12 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JULY, 2024.

## Tamil

## First Year

## இலக்கணம்–1 நன்னூல் எழுத்து, சொல்

Time : 3 hours Maximum marks : 70

### பகுதி அ — ($3 \times 3 = 9$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.

1. பாயிரத்திற்குரிய வேறு பெயர்கள் யாவை?

2. புணர்ச்சி என்றால் என்ன?

3. மெய்யீற்றின் முன் உயிர் புணர்தலுக்குச் சான்றுகள் எழுதுக.

4. ஆகுபெயர் என்றால் என்ன?

5. வினாக்களின் வகைகளை எழுதுக.

பகுதி ஆ — ($3 \times 7 = 21$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

6. நூலின் இயல்புகள் குறித்து எழுதுக.

7. உயிரீற்றின் முன் வல்லினம் புணருமாற்றைச் சான்றுகளுடன் விளக்குக.

8. தேன் எனும் சொல் புணர்தலுக்குரிய விதிகளைச் சான்றுகளுடன் எழுதுக.

9. சொல் பாகுபாடு குறித்து விளக்குக.

10. அன்மொழித் தொகை என்றால் என்ன? சான்று காட்டி விளக்குக.

பகுதி இ — ($4 \times 10 = 40$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

11. நூலின் உத்திகள் குறித்து நன்னூலார் குறிப்பிடுவனவற்றை விவரி.

12. எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

13. மெய்யீற்றின் முன் மெய் புணருமாற்றைச் சான்றுகளுடன் விவரி.

14. பெயர்ச்சொல் என்றால் என்ன? அதன் வகைகள் குறித்து விவரித்தெழுதுக.

15. வேற்றுமை என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

16. பொருள்கோள் பற்றிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

17. குறிப்பால் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் குறித்து விவரி.

---

| UG-AN-1018 | BLTN-13 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JULY 2024.

## Tamil

## First Year

### மொழியியல்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 100 வார்த்தைகளில் விடையளி.

1. உயிர்நீட்சி என்றால் என்ன? சான்று தருக.

2. ஒலியழுத்தத்தின் வகைகள் குறித்து எழுதுக.

3. வேற்றுமை உருபுகள் யாவை? சான்று தருக.

4. தமிழில் உள்ள நிகழ்கால இடைநிலைகள் யாவை? சான்று தருக.

5. ஆகுபெயர் என்றால் என்ன? சான்று தருக.

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 200 வார்த்தைகளில் விடையளி.

6. உடம்படுமெய் பற்றி மு.வ. கூறும் கருத்துக்களை விளக்குக.

7. ஓரினமாதல் என்றால் என்ன? சான்று காட்டி விளக்குக.

8. உயர்சொற் கிளவி பற்றி மு.வ. குறிப்பிடுவனவற்றை எழுதுக.

9. வினைச்சொற்கள் காலம் காட்டும் முறை குறித்து விளக்குக.

10. மங்கல வழக்கு, இடக்கரடக்கல், குழுஉக்குறி – சான்றுகளுடன் விளக்குக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

எவையேனும் நான்கு வினாக்களுக்கு 500 வார்த்தைகளில் விடையளி.

11. உயிரொலிகளின் திரிபுகளும் மாற்றங்களும் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

12. சொல்லின் திரிபுக்கான காரணங்கள் மற்றும் இயல்புகளை விளக்கியெழுதுக.

13. அடிச்சொற்களின் வகைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

14. வேற்றுமையின் வகைகள் குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

15. தமிழில் திணை, பால், எண் உணர்த்தும் முறைகள் குறித்து விளக்கியெழுதுக.

16. தமிழ்ச் சொற்றொடர் அமைப்பினை மு.வ. வழிநின்று விவரி.

17. தமிழில் பெயரடைகள், வினையடைகள் வரும் முறை குறித்து விவரி.

---

| **UG-AN-1019** | **BLTN-14** |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JULY 2024.

## Tamil

## First Year

தமிழ் கற்பித்தல்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.

1. கற்றலில் வானொலியின் பயன்பாடு குறித்து எழுதுக.

2. கற்றலில் தொலைக்காட்சியின் பயன்கள் யாவை?

3. விளையாட்டுமுறைக் கற்பித்தலின் நிறைகள் குறித்து எழுதுக.

4. நடிப்புமுறைக் கற்பித்தலின் நன்மைகள் யாவை?

5. கேட்கும் திறனின் மூன்று பகுதிகள் யாவை?

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

6. வாய்மொழிப் பயிற்சியின் இன்றியமையாமை குறித்து விளக்குக.

7. மாணவர்களுக்குச் சொற்களஞ்சியத்தைப் பெருக்கும் வழிமுறைகள் பற்றி எழுதுக.

8. கட்டுரைப் பாடம் கற்பித்தலின் அவசியத்தை விளக்குக.

9. உரைநடை கற்பித்தலின் பயன்பாட்டையும், அதன் வகைகளையும் விளக்குக.

10. செய்யுள் கற்பிக்கும் முறைகள் குறித்து எழுதுக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

11. மொழியின் இன்றியமையாமையை உணர்த்தும் இலக்கண வகைகள் குறித்து விவரி.

12. மதிப்பீட்டின் அடிப்படைக் கூறுகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

13. நல்ல தேர்வின் இன்றியமையாக் கூறுகள் பற்றி விளக்கியெழுதுக.

14. பள்ளி நூலகமும் மொழியாசிரியரின் கடமையையும் குறித்து விவரி.

15. நல்ல பாடநூலின் பண்புகள் பற்றிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

16. தொல்காப்பிய உரையாசிரியர்களின் உரைச்சிறப்பினை விளக்கியெழுதுக.

17. தாய்மொழியைக் கற்றுக்கொள்வதால் ஏற்படும் பயன்களை விவரி.

---

| UG–AN–1020 | BLTAN–11 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION — JULY 2024

## Tamil

## First Year

### தமிழக வரலாறும் பண்பாடும்

Time : 3 hours    Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு 100 சொற்களில் விடையளி.

1. தமிழக வரலாற்றை அறிவதற்கான புதைபொருள் சான்றுகள் யாவை?

2. களப்பிரர் என்பவர் யார்?

3. பிற்காலச் சோழர்கள் குறித்து எழுதுக.

4. மார்க்கோபோலோவின் பயணக் குறிப்புகள் தரும்செய்தி யாது?

5. மூக்கறுப்புப் போர் அல்லது இரண்டாவது மைசூர்ப் போர் பற்றிய செய்திகளை எழுதுக.

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு 200 சொற்களில் விடையளி.

6. சங்ககால அரசுகள் குறித்து விளக்குக.

7. நரசிம்மவர்மனின் ஆட்சிக்காலம் குறித்து விளக்குக.

8. சோழர்களின் ஆட்சிச் சரிவுக்கான காரணங்கள் பற்றி விளக்குக.

9. திருமலை நாயக்கரின் ஆட்சி முறை குறித்து எழுதுக.

10. விடுதலைக்குப் பிந்தைய இலக்கிய வளர்ச்சி குறித்து விவரி.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு 500 சொற்களில் விடையளி.

11. தமிழக வரலாற்றினை அறிவதற்கான அடிப்படைச் சான்றுகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

12. தமிழகத்தின் இயற்கையமைப்பு முறை குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

13. பல்லவர் காலச் சமுதாய மாற்றங்கள் குறித்து விவரித்தெழுதுக.

14. சோழர்கள் காலமும் தமிழ்ச் சமுதாய வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

15. பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சிமுறை குறித்து விவரி.

16. விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு குறித்து விளக்கியெழுதுக.

17. விடுதலைக்குப் பிந்தைய தமிழகத்தின் கலை, இலக்கியம், பண்பாட்டு, சமூக, அரசியல் நிலை குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

———————

| UG–AN–1021 | BLTN-21 |
|---|---|

U.G. DEGREE EXAMINATION –
JULY 2024.

Tamil

Second Year

இடைக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.

1. நாவுக்கரசர் மண்ணுயிர்களுக்குக் கூறும் அறிவுரைகள் யாவை?

2. மாணிக்கவாசகருக்காக இறைவன் நிகழ்த்திய அற்புதங்களில் ஒன்றினை எழுதுக.

3. சிலப்பதிகாரம் – குறிப்பு எழுதுக.

4. குணங்குடியார் வாழ்க்கைக் குறிப்பினை எழுதுக.

5. தாவீதின் பக்தித்திறனைப் புலப்படுத்துக.

பகுதி ஆ — ($3 \times 7 = 21$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

6. தேவாரப் பதிகங்கள் வெளிப்படுத்தும் சிவபெருமானின் சிறப்புகள் குறித்து எழுதுக.

7. பெரியாழ்வார் திருமொழியில் தாலாட்டுப் பாடல் அமைப்புக் குறித்து எழுதுக.

8. குணங்குடியாரின் இறைக்கொள்கையினை விளக்குக.

9. வாலி இராமனை எவ்வாறு போற்றியுரைத்தான்? விளக்குக.

10. தாவீது மன்னனின் சிறப்புகளை எழுதுக.

பகுதி இ — ($4 \times 10 = 40$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

11. சைவ, வைணவ சமய நெறிகளின் சிறப்புகளை நும்பாடப் பகுதி கொண்டு விவரி.

12. குணங்குடி மஸ்தான் சாகிபின் இறைக்கொள்கையை விளக்கி யெழுதுக.

13. கானல்வரிப் பாடல்கள் வெளிப்படுத்தும் அகத்துறைச் செய்திகள் குறித்து விளக்கியெழுதுக.

14. வாலி - சுக்கிரீவன் போர் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

15. சூசை பிறந்த வரலாற்றினை வளன் சனித்த படலம் வழி விவரித்தெழுதுக.

16. தேம்பாவணியின் மொழிநடையை நும்பாடப்பகுதி கொண்டு ஆய்ந்தெழுதுக.

17. தமிழ் இலக்கிய வகைமைகளில் பக்தி இலக்கியங்கள் பெறும் இடத்தினை விவரி.

———————

| UG-AN-1022 | BLTN–22 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JULY 2024.

தமிழ்

Second Year

இலக்கணம்–II நம்பியகப்பொருள், புறப்பொருள்
வெண்பாமாலை

Time : 3 hours                                   Maximum marks : 70

பகுதி அ — ($3 \times 3 = 9$ மதிப்பெண்கள்)

மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

1. எண்வகை மணங்களைச் சுட்டுக.

2. அல்ல குறி என்றால் என்ன?

3. கற்பில் கூற்றிற்கு உரியார் யாவர்?

4. வஞ்சித் திணையின் பொருளைச் சுட்டுக.

5. கொடிநிலை என்ற துறையின் பொருளைப் புலப்படுத்துக.

பகுதி ஆ — ($3 \times 7 = 21$ மதிப்பெண்கள்)

எவையேறும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

6. கைக்கிளையின் இலக்கணம் கூறி, அதற்கு உரியோர் யாவரெனக் கூறுக.

7. இருவகைக் குறிகளை விளக்குக.

8. உடன்போக்கின் வகைகள் யாவை?

9. கொற்றவை நிலை–விளக்குக.

10. வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து–விளக்குக.

பகுதி இ — ($4 \times 10 = 40$ மதிப்பெண்கள்)

எவையேனும் நான்கனுக்கு விரிவாக விடையளிக்க.

11. குறிஞ்சித் திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களை விளக்குக.

12. பாங்கிமதி உடம்பாட்டின் வகைகளையும் விரிகளையும் எடுத்துரைக்க.

13. ஒழிபியலில் கூறப்படும் செய்திகளை வகைப்படுத்தி விவரிக்க.

14. வெட்சி, போரின் தொடக்கம் என்பதை விளக்கியுரைக்க.

15. தும்பைத்திணை காட்டும் மகளிர் வீரம் பற்றிக் கட்டுரைக்க.

16. பண்டைத் தமிழரின் வீரச் சிறப்பைப் புறப்பொருள் வெண்பாமாலைவழி விளக்குக.

17. உணர்ந்த உணரும் ஊடற்குரியன, உணரா ஊடற்குரியன எவை?

---

| UG-AN-1023 | BLTN-23 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JULY 2024.

## Tamil

## Second Year

அற இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

1. இல்லற வாழ்வின் சிறப்புகள் குறித்து எழுதுக.

2. 'நாலடியார்' பற்றிச் சிறு குறிப்பு வரைக.

3. 'ஏலாதி' – குறிப்பு வரைக.

4. நீதிவெண்பா கூறும் கண்களின் வகைகளையும், நூறு மடங்கு பாவத்தைத் தரும் செயல்களையும் குறிப்பிடுக.

5. பெருமையுடையோரின் தன்மைகளாக நறுந்தொகை கூறுவனவற்றை எழுதுக.

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

6. பொறாமையினால் உண்டாகும் கேட்டினை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

7. பழமொழி நானூற்றில் இடம்பெறும் வரலாற்றுச் செய்திகள், இதிகாச, புராணச் செய்திகளை விவரிக்க.

8. மனித வாழ்க்கையில் நாள்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய உயரிய ஒழுக்கங்களை ஆசாரக்கோவையின் வழி தொகுத்து எழுதுக.

9. பணிவுடைமையின் சிறப்புகளாக நீதிநெறி விளக்கம் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

10. பாரதியாரின் 'ஆத்திசூடி'யில், 'உயிர்வரிசை' அறக்கருத்துகளை விளக்கி எழுதுக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

11. தமிழில் அற இலக்கியங்கள் தோன்றி வளர்ந்த விதத்தினை விவரித்துக் கட்டுரை வரைக.

12. 'பழமொழி நானூறு' வலியுறுத்தும் உயர்ந்த வாழ்வியல் அறங்களைத் தொகுத்துக் கட்டுரை வரைக.

13. ‘முதுமொழிக்காஞ்சி’ வலியுறுத்தும் அறக்கருத்துகளைத் தொகுத்துரைக்க.

14. வாழ்க்கையில் துன்பத்தைத் தருகின்ற இன்னாத செயல்களை ‘இன்னா நாற்பது’ வழி விவரிக்க.

15. பாரதிதாசனின் ‘ஆத்திசூடி’ இயம்பும் அறக்கருத்துகளைத் தொகுத்து வரைக.

16. இளமை நிலையாமை குறித்து நாலடியார் கூறும் அறக்கருத்துகளை விவரிக்க.

17. காரியாசான் வலியுறுத்தும் அறக்கருத்துகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.

———————

| UG-AN-1024 | BLTN–24 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JULY 2024.

## Tamil

### Second Year

மொழித்திறன்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — ($3 \times 3 = 9$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

1. பேச்சுக்கலையின் இன்றைய நிலையை எடுத்துரைக்க.
2. கட்டுரை இலக்கியத்தின் பண்புகள் குறித்து எழுதுக.
3. செய்திக் கட்டுரைகள் எழுதும் முறைமைகளை எடுத்துரைக்க.
4. கடிதங்கள் எழுதும்போது பின்பற்றவேண்டிய விதிமுறைகளை எழுதுக.
5. திரைப்படத் திறனாய்வாளர்களுக்குரிய தகுதிகள் யாவை?

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

6. பேச்சாற்றல் குறித்து அறிஞர்கள் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

7. 'ஆனந்தவிகடன்' வெளியிட்ட கட்டுரைகள் குறித்து விளக்கி வரைக.

8. செய்திகளின் வகைகளை விளக்குக.

9. வணிகக் கடிதங்களின் வகைகளை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கி எழுதுக.

10. நூல் மதிப்புரையின் அமைப்பு, சிறப்புக் குறித்து விவரிக்க.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

11. பேச்சுக்கலையின் வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

12. கட்டுரையின் வரைவிலக்கணம், அவற்றின் பண்புகள் குறித்து விளக்கி வரைக.

13. பத்திரிகைச் செய்திகளை எழுதும் முறைமை, மொழிப்பயன்பாடு குறித்துக் கட்டுரை வரைக.

14. ஆவணங்களின் அமைப்புமுறை, எழுதும் முறைமை, ஆவணச்சட்டங்கள் – பற்றிய கருத்துகளைத் தொகுத்துரைக்க.

15. இலக்கியத்திறனாய்வு என்றால் என்ன? அதன் வகைகளை விவரித்துக் கட்டுரை வரைக.

16. கட்டுரைகளின் கருப்பொருள்கள், உள்ளடக்கங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை விவரிக்க.

17. ‘சுருக்கி வரைதலின்’ நிலைகளைத் தொகுத்துரைக்க.

————————

| UG-AN-1025 | BLTAN–21 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION –JULY 2024.

Second Year

தமிழ்

ஊடகக்கலை

Time : 3 hours　　　　Maximum marks : 70

பகுதி அ — ($3 \times 3 = 9$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

1. ‘மரபுவழி ஊடகங்கள்’ – குறித்து விளக்குக.

2. செய்தியாளருக்குரிய அடிப்படைத் தேவைகள் யாவை? விளக்குக.

3. வானொலியின் தோற்றத்திற்கு முன்னோடிகளாக இருந்த மூவர் யாவர்? அவர்களைப் பற்றி எழுதுக.

4. கேமராவின் மூன்று வகைக் கோணங்கள் குறித்து எழுதுக.

5. இந்திய, தமிழ் மொழிகளில் ‘முதல் பேசும் படம்' குறித்து எழுதுக.

பகுதி ஆ — ($3 \times 7 = 21$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

6. ‘இணையத்தளம்’ எனும் நவீன தொழில்நுட்பத்தின் செயல்பாடுகள் குறித்து விடையளிக்க.

7. அச்சுப்பிழை திருத்தக் குறியீடுகளின் அடையாளக் குறியீடுகள் சுட்டப் பெறும் முறைமை குறித்து விளக்கி எழுதுக.

8. வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் வடிவங்கள் குறித்து விளக்கி எழுதுக.

9. தொலைக்காட்சிக்கு ‘ஸ்கிரிப்ட்’ எழுதும் முறைமை குறித்தும், அதன் வகைகள் குறித்தும் விளக்குக.

10. ஆவணப்படத்தின் வகைகள் யாவை? அவற்றைக் குறித்து விளக்கி எழுதுக.

பகுதி இ — ($4 \times 10 = 40$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

11. சமூகமயமாதலில் ஊடகங்களின் பங்களிப்பினையும், செயல்பாடுகளையும் குறித்துக் கட்டுரை வரைக.

12. செய்தியைச் செப்பனிடும்போது கவனிக்க வேண்டிய செய்திகளைக் குறித்துக் கட்டுரை வரைக.

13. வானொலிக்குச் செய்தி எழுதுவோர் பின்பற்ற வேண்டிய முறைமைகள் குறித்து விளக்கி எழுதுக.

14. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

15. திரைப்படத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

16. கதைப்படம் என்றால் என்ன? அவற்றின் வகைகள் குறித்து விளக்குக.

17. இதழ்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் குறித்து விளக்கி எழுதுக.

———————

| UG-AN-1026 | BLTN-31 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JULY, 2024.

Third Year

சங்க இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — ($3 \times 3 = 9$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

1. ‘பிசிராந்தையார்’ குறித்து எழுதுக.

2. முல்லைக்கலி கூறும் செய்திகளை விளக்குக.

3. அகநானூறு தொகுக்கப்பட்டுள்ள முறைமையைக் கூறுக.

4. ‘வேட்கைப்பத்து’ – பெயர்க் காரணம் குறித்து எழுதுக.

5. யாழினது வடிவத்தையும் தோற்றத்தையும் சிறுபாணாற்றுப்படை வழி எழுதுக.

பகுதி ஆ — ($3 \times 7 = 21$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

6. குறுந்தொகைப் பாடல்களில் காணப்பெறும் வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுத்து எழுதுக.

7. ஆயர்கள் ஏறுதழுவும் காட்சியினைத் தோழிக் கூற்றின் மூலம் விவரித்து எழுதுக.

8. செவிலித்தாய் 'நவ்வி' மானினை நோக்கி யாது கூறினாள்? விளக்குக.

9. ஞாழற்பத்தில் இடம்பெறும் தலைவி, தலைவன் மீது கொண்ட பேரன்பினை வெளிப்படுத்தும் முறைமையை விளக்குக.

10. வேனிற் காலத்தையும், விறலியின் தோற்றத்தையும் நத்தத்தனார் வருணிக்கும் திறத்தை விளக்குக.

பகுதி இ — ($4 \times 10 = 40$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

11. குறுந்தொகையில் ஔவையாரின் பாடற் கருத்துகளைத் தொகுத்து விளக்கி எழுதுக.

12. பரிபாடலின் திணை – துறை – அமைப்புமுறை குறித்துக் கட்டுரை வரைக.

13. பரணரின் பாடல் வழியாகப் பேகனின் வண்மைத்திறத்தை விளக்குக.

14. ‘செலவு அழுவித்த பத்து’ பொருள் தருக. செலவு அழுவிக்கும் விதத்தினை ஓதலாந்தையார் பாடல்கள் வழி விளக்கிக் கட்டுரை வரைக.

15. சிறுபாணாற்றுப்படை கூறும் நகரங்களின் சிறப்புகளையும், மக்களின் விருந்தோம்பும் மாண்பினையும் விளக்குக.

16. சேரன் செங்குட்டுவனின் சிறப்புகளாகப் ‘பதிற்றுப்பத்து’ கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

17. பாணர்களின் வாழ்வியலையும், நல்லியக்கோடனின் சிறப்புகளையும் குறித்து விளக்கி எழுதுக.

———————

**UG–AN–1027** **BLTN–32**

U.G. DEGREE EXAMINATION —
JULY 2024.

Tamil

Third Year

இலக்கணம் –3 யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.

1. அளபெடை என்றால் என்ன?

2. கலிப்பாவின் இனங்கள் யாவை?

3. பெருங்காப்பிய இலக்கணம் யாது?

4. ஒருவழிச் சேறல் என்றால் என்ன?

5. புகழாப் புகழ்ச்சி அணியின் இலக்கணம் யாது?

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

6. அசையின் வகைகள் குறித்து எழுதுக.

7. நால்வகைப் பாக்களுக்குரிய ஓசைகள் பற்றி விளக்குக.

8. பெருங்காப்பிய இலக்கணம் யாது? விளக்குக.

9. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் எழுதுக.

10. புகாழப் புகழ்ச்சி அணியின் பொது இலக்கணம் யாது? சான்று தந்து விளக்குக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

11. செய்யுள் உறுப்புகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

12. ஆசிரியப்பாவின் வகைகளை விளக்கிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

13. பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகள் குறித்து விளக்கியெழுதுக.

14. வனப்பு என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுகளுடன் விவரி.

15. உவமை அணியின் இலக்கணம் யாது? அதன் வகைகளை விளக்கிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

16. உருவக அணியின் வகைகளைச் சான்றுகளுடன் விவரி.

17. வேற்றுமை அணியின் இலக்கணம் யாது? அதன் வகைகளைச் சான்றுகளுடன் விவரி.

———————

| UG–AN–1028 | BLTN–33 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION — JULY 2024.

## Tamil

## Third Year

தமிழ்மொழி வரலாறும் தமிழ் இலக்கிய வரலாறும்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.

1. வரலாற்று மொழியியல் என்பது யாது?

2. தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள் யாவை?

3. தமிழின் மிகப்பழைய செய்யுள் வகைகள் யாவை?

4. தேவார மூவர் யாவர்?

5. ஒப்பிலக்கியம் – குறிப்பு எழுதுக.

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களுள் ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

6. இன்றைய பேச்சுத் தமிழில் ஏற்பட்டுள்ள ஒலிமாற்றங்கள் குறித்து எழுதுக.

7. செய்யுள் வகைகள் பற்றி எழுதுக.

8. தொடரியல் பற்றி மரபிலக்கணங்கள் கூறுவனவற்றை விளக்குக.

9. திருக்குறளின் சிறப்புகள் பற்றி எழுதுக.

10. தமிழில் கவிதை இலக்கியத்தின் தோற்றம் குறித்து எழுதுக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

11. தமிழ்மொழி வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் குறித்து விவரித்தெழுதுக.

12. சங்க மருவிய காலத் தமிழ் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

13. சங்க இலக்கியங்கள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

14. இரட்டைக் காப்பியங்கள் – விவரி.

15. தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியங்கள் எனும் பொருளில் கட்டுரை ஒன்றினை எழுதுக.

16. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

17. தமிழ் இலக்கியங்களின் புதிய போக்குகளை மதிப்பிடுக.

———————

| UG–AN–1029 | BLTN–34 |
| --- | --- |

# U.G. DEGREE EXAMINATION – JULY 2024.

## Tamil

## Third Year

### இலக்கியத் திறனாய்வும் படைப்பிலக்கியமும்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 100 வார்த்தைகளுக்குள் விடை தருக.

அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்களைக் கொண்டுள்ளன.

1. இலக்கியம் எதிலிருந்து உருவாகிறது?

2. சிற்றிலக்கியம் - குறித்து எழுதுக.

3. பாராட்டுமுறைத் திறனாய்வு என்றால் என்ன?

4. சமயம் என்ற சொல்லின் பொருள் யாது?

5. நோக்குநிலை என்றால் என்ன?

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 200 வார்த்தைகளுக்குள் விடை தருக.

அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்களைக் கொண்டுள்ளன.

6. திறனாய்வின் பணி குறித்து விளக்குக.

7. புனைகதை இலக்கியத்தின் பொதுப்பண்புகளை விளக்குக.

8. திறனாய்வின் அடிப்படைப் பண்புகள் குறித்து விளக்குக.

9. கலையின் அடிப்படைகள் பற்றி எழுதுக.

10. காட்சிப்படுத்தல் என்பதை விளக்குக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

ஏழு வினாக்களில் இருந்து ஏதேனும் நான்கு வினாக்களுக்கு 500 வார்த்தைகளுக்குள் விடை தருக.

அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்களைக் கொண்டுள்ளன.

11. திறனாய்வாளரின் பண்புகள் குறித்து விவரி.

12. இலக்கிய உத்திகள் குறித்து விளக்கியெழுதுக.

13. புனைகதை இலக்கியங்கள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

14. வாய்மொழி இலக்கியங்கள் குறித்து விளக்கியெழுதுக.

15. திறனாய்வு வகைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

16. திறனாய்வும் இலக்கிய வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

17. நாடகம் படைத்தல் முறை குறித்து விவரி.

---

| UG–AN–1030 | BLTAN–31 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION — JULY 2024.

## Tamil

## Third Year

## நாட்டுப்புறவியல்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு 100 வார்த்தைகளில் விடையளி.

1. இலக்கிய மரபு என்றால் என்ன?

2. நாட்டுப்புறப் பாடல்களை சு. சண்முகசுந்தரம் எவ்வாறு வகைப்படுத்துகிறார்?

3. வளமைச் சடங்கு என்றால் என்ன?

4. நாட்டுப்புற மருத்துவத்தின் பல்வேறு பெயர்களை எழுதுக.

5. தெருக்கூத்து நிகழ்த்தப்படும் சூழல்கள் யாவை?

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு 200 வார்த்தைகளில் விடையளி.

6. சூழலியல் கோட்பாடு குறித்து விளக்குக.

7. நாட்டுப்புற வழக்காறுகளில் பழமொழிகள் பற்றி எழுதுக.

8. கதைப்பாடல் வகைப்பாடு குறித்து விளக்குக.

9. நாட்டுப்புற விளையாட்டின் பயன்கள் குறித்து எழுதுக.

10. நாட்டுப்புறக் கலைஞர்களின் பொருளாதார நிலை குறித்து விளக்குக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

ஏழு வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு 500 வார்த்தைகளில் விடையளி.

11. நாட்டுப்புறவியலின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

12. நாட்டுப்புறவியல் ஆய்வு வரலாறு குறித்து விவரி.

13. நாட்டுப்புறப் பாடல் வகைமைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

14. நாட்டுப்புற மருத்துவம் பற்றி விளக்கியெழுதுக.

15. நாட்டுப்புற விளையாட்டுகள் பற்றி விவரி.

16. நாட்டுப்புற உணவுமுறைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

17. நாட்டுப்புறவியலில் புழங்குபொருட்கள் குறித்து விவரி.

---